செய்தி வெளியீடு எண். 29-2018 நாள்: 18.05.2018

# விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள முன்னாள் படைவீரரைச் சார்ந்தோர்கள் 2018-19ம் கல்வி ஆண்டிற்கு பட்டயப்படிப்புகள், பட்ட மேற்படிப்புகள் போன்ற படிப்புகளுக்கு தமிழ்நாடு அரசால் செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீடு பெற, முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் சார்ந்தோர் சான்று பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

******

2018-2019ம் கல்வி ஆண்டிற்கு முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்களுக்கு மருத்துவம், பொறியியல், டி.பார்ம், பி.பார்ம், பாலிடெக்னிக்கில் பட்டயப்படிப்புகள், பிஎஸ்சி (நர்சிங்), பிஎஸ்சி (விவசாயம்), பி.எட்., இந்திய மருத்துவம், பி.வி.எஸ்.சி., பி.எப்.எஸ்.சி., ஆசிரியர் பயிற்சி, பட்டயப்படிப்புகள், பட்ட மேற்படிப்புகள் போன்ற பல்வேறு படிப்புகளில் தமிழ்நாடு அரசால் இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விட ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பித்த முன்னாள் படைவீரரைச் சார்ந்தோர்கள் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் சார்ந்தோர் சான்று பெறுதல் வேண்டும்.

இச்சான்றினைப் பெறுவதற்கு முன்னாள் படைவீரரின் அசல் படைவிலகுச் சான்று, இவ்வலுவலகத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, சார்ந்தோர்களின் பள்ளி இறுதிச் சான்று, மதிப்பெண் பட்டியல், சாதிச்சான்று, இருப்பிடச் சான்று, கல்வி நிலையத்தில் பெறப்பட்ட விண்ணப்பம், வெள்ளைத்தாளில் முன்னாள் படைவீரரின் மனு ஆகியவற்றுடன் முன்னாள் படைவீரர் சான்று பெற வேண்டிய மகன்/ மகளுடன் விழுப்புரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரில் அணுகி சார்ந்தோர் சான்று பெற்று இட ஒதுக்கீட்டின்படி விண்ணப்பித்து பயனடையலாம்.

இதற்கு முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட சார்ந்தோர் சான்றிதழை பயன்படுத்தக் கூடாது எனவும், நடப்பு ஆண்டிற்கு விண்ணப்பிக்கும் போது புதியதாக சார்ந்தோர் சான்று பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட சான்றிதழை நடப்பு கல்வி ஆண்டிற்கான விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பும் விண்ணப்பங்கள் கல்வி நிறுவனங்கள்/ பல்கலைக் கழகத்தால் கூர்ந்தாய்வு செய்யப்படும் போது நிராகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இவ்வாண்டு முதல் சார்ந்தோர் சான்று Online மூலம் வழங்கிட வழி வகுக்கப்பட்டுள்ளதால் சார்ந்தோர் சான்று பெற்றிட விண்ணப்பிக்கும் முன்னாள் படைவீரர்களின் பெயரினை முன்கூட்டியே விழுப்புரம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.